உ

கணபதி துணை

கொள்ளிடம், காவேரி

வெள்ளக் கொடுமைச் சிந்து.



முத்தமிழ் க்ஷேத்திர

எம். இ. எம். பாஸ்கரதாஸரவர்கள்

இயற்றியது.

T. கிருஷ்ணசாமி பிள்ளை & பிரதர்,

புத்தகவியாபாரம் புதுமண்டபம்

மதுரை.

ரிஜிஸ்டர் செய்தது.] 1924. [விலை அணா 1.

அஷ்டலக்ஷ்மி விலாசம் பிரஸ், மதுரை:—1924.

உ

கணபதி துணை.

கொள்ளிடம், காவேரி,

வெள்ளக் கொடுமைச் சிந்து

தேசாபிமானி முஹம்மதலி சிங்கம்—என்ற மெட்டு.

இராகம் பியாகு-தாளம்-ரூபகச்சாப்பு.

விநாயகர் துதி.

தென்னாட்டைச்சார் சோழ தேசத்திலே—பல
செல்வ மிகுந்த கிராமத்திலே

அநுபல்லவி.

மூன்னாட்டுங் காவேரி வெள்ளத்திலே—வந்த
மோசத்தைச்சொல்ல வென்னுள்ளத்திலே

தொகையறா.

குடிகொண்ட குஞ்சரத்தைங்கரன் பாதமே
அடிகொண்டசிந்து வகையால் துதிப்பேனீதமே

பாட்டுத்தொடர் முன் பல்லவிபோல்.

ஆதலாற் சோதர சோதரிகாள்—இதை
ஆசைவைத்துக் கேட்பீர் மேதினிகாள்

தொகையறா.

ஆண்டுரக்தாக்ஷி ஆடிமுற்பகுதியிலே
ஈண்டு நம்மக்களின் கஷ்டத்தொகுதியிலே

பாட்டு முடுகு.

இதைவிட்டவேறினி இயம்பவுமாமோ
கதையிலுமில்லை கொடுங்காலமுந்தாமோ
எம் மீ யெம் பாஸ்கரத்தண்டமிழ் வாக்கியச்
செம்மைக்கோராஸ் பதங் கொண்ட சிலாக்கியத் [தென்]

காலத்தைப்பாரீர், கலிகாலக் கொடுமையின்

கோலத்தைக்கேளீர்—என்ற மெட்டு

இராகம் நாதநாமக் கிரியை-தாளம் ரூபகம்.

பல்லவி.

கொடுமையைக் கேளீர் காவேரி வெள்ளஞ் செய்
கோலத்தைப்பாரீர் [கொ]

அநுபல்லவி.

தடுமாற்றமில்லாத தாணியிலிதைச்சொல்லப்
படுமோ மனம் நோவப் படுமோ பெரும் பாவக் [கோ]

சரணம்.

1. நெடுமாலுக்கிடங்கொண்ட நீள்புவிமீதிலே
நெஞ்சம் புண்பட வெள்ளப் பஞ்சஞ் செய்குதிலே
படுமோசம் குடி நாசம் பற்பலவூர் நாசம்
பாங்கான ரயில்பாதை பலவிதத்தும் நாசம் [கோ]

2. நாகரீகங்கள் மி குந்த தனி நாடு
நாடிய கூடும்வி சேடஞ் சேர் பொன்னாடு
யோகம் பிறக்குமி கழ்ந்த முதல் நாடு
யூகித்துப் பேசுஞ் சி லாக்கியச் சோணாடு [கோ]

3. கல்விச்சம்பத்துடன் செல்வச்சம்பத்தோடு
காசினி போற்றிடுங் கற்பகம் போல் நாடு
பல்விசேடஞ் செழித் தோங்கும் பழ நாடு
பாரில் முதற்றா மாகிய சோணாடு [கோ]

4. எண்ணிய முப்பத்தி ரண்டறந்தோய் நாடு
ஈகைக்கிருப்பிட மாகிய தாய் நாடு
மண்ணிலுவமிக்க வகையுள்ள நீர் நாடு
மக்கள் பசி போக்க வந்திடுஞ் சோணாடு [கோ]

5. புண்ணியமோங்கிப்பு கழ்பெற்ற திருநாடு
பூவளம் நீர்வளம் பொங்குந் தமிழ் நாடு
விண்ணுலக ோரும்வி யந்து சொல்லும் நாடு
வேளாவென்றோன் வாழ வேண்டிடுஞ்சோணாடு [கோ

6. கற்பகம் போலக்க னிந்துதவும் நாடு
கம்பன் ஒட்டக்கூத்தன் காத்த தமிழ் நாடு
அற்புதக்காளமே கம் பிறக்கும் நாடு
ஆரியர் போற்றிடும் சீரிய சோணாடு [கோ]

7. இத்தாதி வைபவம் சேர்ந்த சோணாட்டுக்கே
என்றுமில்லாதப டுங்கஷ்டப்பாட்டுக்கே
இத்தாதி தேவாரத் தேடாதபாவமோ
தெய்வத்திருவுளம் சீறிய கோபமோ [கோ]

8. மைகுரிலோயாத / மழைபெய்ய மென்மேலும்
மாருத ஆற்றுப்பெ / ருக் கெடுத்திக்காலம்
நெய்சாருஞ் சோணாட்டும் / நீண்ட சோணாட்டிலே
நீங்காத கொடுந்துன்பம் / நேர்ந்தது தேட்டிலே [கொ]

9 முப்பத்தேழடி வெள்ளம் / தப்பாமல் வந்திட
முன்னுள திருச்சிக்கு / மோசம் புகுந்திட
தப்பாது காவேரிப் / பாலம் பிளந்திட
தண்டோரா சப்தம் உ / ஜாரென்றறைந்திட [கொ]

10. காவேரி வெள்ளத்தில் / கணக்கேது பிணக்கூட்டம்
கால்நடை விலங்குக்கும் / கரையேது நடமாட்டம்
கோவேறு கழுதைக்குங் / குறையேது நதியோட்டம்
கொஞ்சமல்ல இதன் / வஞ்சஞ்சொல்ல வாட்டம் (கொ)

11. தும்பிக்கையானையோ / டெருதும் மிதந்ததாம்
தொட்டிற் பிள்ளைகளும் / மட்டின்றி வந்ததாம்
நம்பிக்கையில்லாமல் / நானிலம் நொந்ததாம்
நாடெங்கும் கூக்குர / லாகப் பிறந்ததாம் (கொ)

12. ஊரெங்கும் பெருவெள்ளம் / என்று பறப்பாரும்
உற்றபிள்ளைகளை / விட்டுத்த விப்பாரும்
ஸ்ரீரங்கம் கொள்ளிடம் / சேத மென்றுரைப்பாரும்
திருவானைக்காவுக்கும் / தீமையென்றழுவாரும் (கொ)

13. வீடேது மாடேது / நாடேது காடேது
வெள்ளாண்மைப் பயிரேது / மேலான வயலேது
தேடுநதியோரம் / திரளான ஜனமேது
திண்டாடும்படி வந்த / தீவினை மண்மீது (கொ

14. திருச்சியைச் சேர்ந்திட்ட / சிந்தாமணிக்குற்ற
தீமையை யெனசொல்வேன் / செல்வமக்கள் கஷ்டம்
விருச்சிகத்தாற்பட்ட / வெள்ளைக் கொக்குபோல
வெள்ளத்தினாலுற்ற / மிடுக்குகளோசால (கொ)

15. பலகோடித்திரவியத் / தாலானக் கொள்ளிடப்
பாலமுழுடைந்திடப் / பாரினிலெள்ளிட
நிலமேது குடியேது / நீண்டதெரு வேது
நீரினில் நீந்திமி / தந்தவர் கணக்கேது [கொ]

16. பற்பல ஏழைகள் பசியால் மெலிந்தனர்
பாங்கான வீடின்றிப் பலபேர் வருந்தினர்
முற்பவவினையாயிவ் வெள்ளம் புகுந்திட
மூண்டது கலிகாலம் முன்னாக வென்றனர் [கொ]

17. முசிறியைச்சார்ந்திடும் தொட்டியம் வெள்ளத்தில்
முழுகிப்பெருஞ்சேத மானது பள்ளத்தில்
கஜமுதலாகிய பல்லுயிர் சேதமாம்
கணக்குமெடுத்துரைக் கொண்ணாப்ரமாதமாம் [கொ]

18. பேரான திருச்சிக்கு வெள்ளப் பெருக்கன்றிப்
பின்னஞ்செய்திட வாங்கி பேதியுமட்டின்றிப்
போராடி மக்களைக் கூறுக்க நின்றிடில்
பூதலமீதவர்பாடு சொல்லப்போமோ (கொ)

19. திருச்சி செய்தீவினை யோதவமோ தெய்வத்
திருவுளச் சோதனை யோ இவையாற்சைவ
அருச்சனை செய்தும் பலனில்லை யவர்பாடு
அடிக்கும் மத்தளம்போல இருபக்கமுள கேடு [கொ]

ஷவுக்கத்தலி முஹம்மதலி சமர்த்தர்சிறையிருக்க என்றமெட்டு.

1. கோயமுத்தூர் ஜில்லாவிலே குறித்தபவானியிலே
தாயிழந்த சேயைப் போலத் தவிக்கும்படியே வந்த
ஜலத்தின் வெள்ளமே—சொல்லப்—பதைக்குமுள்ளமே

2. காவேரி வெள்ளத்தோடு கலந்த பவானியாறும்
மாவேகமாக வந்து வளைத்துக் கொள்ளப்பவானி
வருந்தின விதமே—சொல்லப்— பொருந்துமோதினமே

3. ஊரெங்குஞ் சமுத்திரம்போ லொருவாறாய் சூழ்ந்திருக்க
வீரஞ்சேர்விலங்கினுக்கும் வீடுகள்பலவற்றுக்கும்
மிகுத்ததேசேதம—மேலும்—தொகுத்ததேயேதம்.

4. எழுநூறு வீடுகளும் ஏராளப்பணப்பொருளும்
முழுவதாக ஒருநொடியில் மோசம்பட்டேயழிய
முடிந்ததேகாலம - வெள்ளம்—தொடர்ந்ததேகோலம்.

5. செல்வச்சகோதரரும் சீமாட்டியும்பலபேர்
சித்தங்கலங்கிநொந்து மெத்தமெலிந்துநின்று
திகைத்தனர்பாவம்—ஒரு—வகைப்பரிதாபம்,

6. படையேறிப்பரிசுமேறி பவானியாறுதாண்டி
இடமாகவே குமார பாளையம்நோக்கிச்செல்லச்
சீறிக்காவேரி — உரு — மாறியேமீறி.

7. வளைத்துவருத்திடவே மக்களெல்லோருமங்கு
இளைத்துச்சஞ்சலித்துநின்று இருதலைக்கொள்ளியான
எறும்புபோலானார் — சிறு — துரும்புபோலானார்.

8. இப்படியாய்ப்பவானி இருந்தமனிதர்யாரும்
செப்பவொண்ணாதகஷ்டத் தீவினைக்காளாகவே
செய்தது வெள்ளம் — நீர் — பெய்ததுவெள்ளம்

9. வீராதி வீரருக்கும் வெள்ளப்பிரளயத்தை
வெல்லுஞ்சக்தியுமுண்டோ தொல்லை நெடுவுலகில்
விளம்பு வீரிதையே — அவர் — புலம்பிடுங்கதையே

10. சத்தியமங்கலத்தார் தாம்பட்டதுன்பஞ்சொல்ல
இத்தனைமீதிலின்று எவரேமனந்துணிவார்
இயம்புவன்கேளீர் — வெள்ளப் — பயந்தனைப்பாரீர்.

11. உருவழிந்து வீடழிந்து உள்ளபொருளழிந்து
கருவழிந்து பலவிதத்துங் கஷ்டங்களேமிகுந்து
கதியுடன்வேக — வெள்ளம் — மிகுதியுமாக.

12. பாலங்கள்பலவழிந்து பாதைநிலையழிந்து
ஞாலத்திலிரண்டரை லட்சம் பொருளழிந்து
நாசஞ்செய்ததுவே — குடி — மோசஞ்செய்ததுவே.

13. உண்ண உணவுமின்றி உடுக்க நல்லாடையின்றி
மண்ணிற்காவேரிவெள்ளம் வந்துபுகுந்ததாலே
மானிடர்யார்க்கும் — மிக — வருத்தமேயாக்கும்.

14. ஊர்மெச்சும்சேலத்திலே உருப்பந்தூரோரத்திலே
நீர்மிச்சமாகவந்து நேமித்தபலகஷ்டத்தை
நிகழ்த்தவும்போமோ — இச் — சகத்திலேதாமோ

15. இருபத்தைந்துமைலுக் கெங்குநின்றுபார்க்கினும்
தரைப்பற்றுக்கிடனில்லாது சமுத்திரம்போலவெள்ளம்
தடுத்துநின்றிடவே — வாய் — படித்துமென்றிடவே.

16. கண்ணீர்விட்டுக்கதறிக் காலநடையெல்லாம்வருந்த
தண்ணீர்செய்த கொடுமை தடுப்பாரெவருமுண்டோ
சலிக்குதேநெஞ்சம்—கொடுங்—கலிக்கெனவஞ்சம்.

17. காதைபுராணத்திலும் கண்டதில்லை கேட்டதில்லை
வாதைதரும்படிக்கு வந்தவெள்ளக்காவிரியை
வழுத்திடுவோமே—நம்—மனதிலேதாமே.

கண்ணபிரானேன்னவே யிக்காசியில்—என்ற மெட்டு.

1. ஈரோட்டுப்பாலத்தையு மிதுவிடுத்ததேது—ஐயா
இதுவிடுத்ததேது.
இருகரையும் புறண்டுவெள்ளம் இழுத்ததேயப்போது.

2. நேரோடும் ரயில்வேபாதை நிலைகெடவுமாச்சு—ஐயா
நிலைகெடவுமாச்சு
நித்தமுமேவந்துபோகும் தந்திதபால்போச்சு.

3. ஏற்றுமதி இறக்குமதி இல்லாமலே ஜங்ஷன்—ஐயா
இல்லாமலே ஜங்ஷன்
இன்றுவரையழுகுன்றி இருக்குதேயட்டங்க்ஷன்.

4. தென்னிந்தியாரயில்வேக்குள்ள சேதங்கொஞ்சமல்ல—ஐயா
சேதங்கொஞ்சமல்ல
ஜெகத்தினிலே நாமிதனைத்தேர்ந்தெடுத்துச்சொல்ல.

5. உன்னதமாய்ச்சென்னைவரை செல்லும்வண்டியேது—ஐயா
செல்லும்வண்டியேது
உறுத்துவரும்வெள்ளத்தாலே கொள்ளிடத்தின்மீது.

6. பற்பல அபாயத்தாலே பலவிதத்தும் ரயிலே—ஐயா
பலவிதத்தும் ரயிலே
பாங்குடன் செல்லத்தடையாய்த் தூங்குதே நல்லொயிலே

7. தஞ்சைமுதல் கொள்ளிடத்துத் தடத்துவரை ரயில்வே—ஐயா
தடத்துவரை ரயில்வே
தனைத்தொடரும் வழியழிந்து தவிக்குதே நன்மையிலே

8. எண்ணுக்கடங்காத பெருள் ரயிலுக்கிங்கு நஷ்டம்—ஐயா
ரயிலுக்கிங்கு நஷ்டம்
இறைவனார் திருவருளோ என்னகாலக் கஷ்டம்

9. போக்குவரத்துக்கில்லாத புகை வண்டியினாலே—ஐயா
புகை வண்டியினாலே
பூமிசையுள்ளோர்கள் நிதம் புலம்பலானார் மேலே

கும்மி மெட்டு

1. தஞ்சைமுதல் திருவையாறு தன்னை
சாற்றும்புனல் நாடு தானாக்கி
பஞ்சமுந்தங்கிட வெள்ளம் வந்ததோதி
பாரிலுள்ளோர் யாவர் சொல்லாரே.

2. கண்ணம்பாடி யணைமேலே புறண்டுள்ள
காவேரி வெள்ளக் கொடுமையாலே
இன்னுந்தலைக் குத்து நோவென்று சொல்லவும்
இருக்குதடி தஞ்சை மாநகரம்.

3. கும்பகோணத்திலும் மாயவரம் பல
குக்கிராமத்திலு முக்கியமாய்
நம்பவொண்ணாமை லிருந்துபுலம்பிய
ராகத்தை என்னென்பேன் நாட்டினிலே.

4. சீகாழி வெள்ளத்தால் தோணிபுரம் போலத்
சீரழிந்தேநொந்து வாடிடவே
போகா வழியெங்கும் பொங்கிப் புனலாகப்
பூமிசைநின்று விளங்கினதே.

5. காவேரியாறெந்த ஊரதைவிட்டது
காணத்தகுந்த நீடாமங்கலம்
ஜீவனிழந்து மெலிந்துநொந்துற்றதைச்
செப்பவுமாகுமோ இப்புவியில

6. காத்திடுஞ்சோணாடு கண்ணீர்விட் டேங்கிட
கங்கையும் கோபித்து வந்தாலும்
சாத்திரம்போற்றிடும் சண்முகவேலவன்
சக்தியால் தேசம் பிழைத்ததடி.

வாழ்த்து வெண்பா

காவேரி தேவியொடு காமாரி யம்பிகையும்
சேவேறு மீசன் திருக்குமரன்—பூவுலகில்
காக்கச்சோணாடுகளிக்கக் கமலத்தாள்
பார்க்கத் தழைக்க வெண்பா.

மதுரை சிங்காரம் கலிவால வேடிக்கைச் சிந்து விலை 0—1—0